சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை - தமிழ்நாடு தூய்மைப் பணிபுரிவோர் நலவாரியம் - பல்வேறு நல உதவிகள் செயல்படுத்துவதற்கான வழிகாட்டி நெறிகள்- ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் (மற்றும்)பழங்குடியினர்நல (ஆதிந6)த்துறை.

அரசு ஆணை (நிலை) எண்.112 - நாள்:24.9.2008

சர்வதாரி, புரட்டாசி 8,
திருவள்ளுர் ஆண்டு 2039

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.71, ஆதிதிராவிடர் (மற்றும்) பழங்குடியினர் நல(ஆதிந 6(1))துறை நாள்.11.6.2007.

2. அரசாணை (நிலை) எண்.47, ஆதிதிராவிடர் (மற்றும்) பழங்குடியினர் நல(ஆதிந 6(1))துறை நாள். 4.4.2008.

---

**ஆணை:**

தமிழ்நாட்டில் தூய்மைப்பணிபுரிவோரின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கென அரசு செயல்படுத்தும் பல்வேறு திட்டங்களின் செயலாக்கத்தை கண்காணித்து இப்பிரிவினரின் முன்னேற்றத்தை உறுதி செய்ய ஆலோசனைகளை வழங்கவேண்டி, முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் தூய்மைப் பணிபுரிவோர் நல வாரியம் ஒன்று அமைக்கப்பட்டது. மாண்புமிகு ஆதிதிராவிடர், நலத்துறை அமைச்சர் அவர்களை தலைவராகவும், அரசு சார்ந்த உறுப்பினர்களாக 13 பேரும், மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்களாக 12 பேர்களையும் கொண்டு தூய்மைப்பணிபுரிவோர் நல வாரியம் இயங்கி வருகிறது.

2. மேற்படி வாரியத்தின் உறுப்பினர் ஆக பதிவு செய்யப்படும் தூய்மைப்பணிபுரிவோர்களுக்கு பல்வேறு நல உதவி திட்டங்களை செயல்படுத்த ரூ.1 கோடி நிதி ஒப்பளிக்கப்பட்டு மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை, வெளியிடப்பட்டுள்ளது.

3. மேற்காணும் ஆணைக்கிணங்க அரசாணையில் குறிப்பிடப் ப...ள செயல்படுத்த, தூய்மைப்பணிபுரிவோர்களை தேர்ந்தெடுக்கவும், அவர்களை உறுப்பினராக சேர்ப்பதற்கு விண்ணப்பிக்க வேண்டிய படிவத்தின் மாதிரி ஒன் ஒப்பளிக்கப்பட்டு இந்த ஆணையில் இணைப்பு I-ல் வைக்கப்பட்டுள்ளது. இந்த மாதிரி படிவத்தை அனைத்து மாவட்டங்களில், செய்தித்தாள்களில், உடனடியாக விளம்பர மேலாண்மை இயக்குநர் தாட்கோ அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

4. மேற்படி விண்ணப்ப படிவத்தை பெற்றபின்பு, அதில் தெரிவிக்கப்பட்டுள்ள வி மெய்த்தன்மையை சரிபார்த்து விண்ணப்பதாரர் வாரியத்தில் உறுப்பினராக தகுதியானவர்/தகுதியற்றவர் என சம்பந்தப்பட்ட மாவட்ட மேலாளர் தாட்கோ தெரிவிப்பார். மாவட்ட மேலாளர் தாட்கோ தெரிவித்ததை மேற்பார்வையிட்டு மே இயக்குநர், தாட்கோ விண்ணப்பதாரருக்கு உறுப்பினர் அட்டையை வழங்குவதற்கு பரிந் இப்பரிந்துரையை ஏற்று மாவட்ட மேலாளர் தாட்கோ ஒப்புதல் அளிப்பார். ஒப்புதல் உறுப்பினர்களுக்கு, மேலாண்மை இயக்குநர், தாட்கோ மூலம் அடையாள அட்டை வழ ஒரு மாதிரி அடையாள அட்டை அரசால் ஒப்பளிக்கப்பட்டு இவ்வாணையில் இ வைக்கப்பட்டுள்ளது.

5. தமிழ்நாடு தூய்மைப்பணிபுரிவோர் நலவாரியம் மூலம் நலத்திட்ட பெறுவதற்காக வழிமுறைகளை (Guidelines) அரசால் ஒப்பளிக்கப்பட்டு இவ்வா இணைப்பு III ல் வைக்கப்பட்டுள்ளது.

6. இவ்வழிமுறைகள் தொகுப்பினை அனைத்து மாவட்ட மேலாளர் அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கவும், வாரியத்தில் உறுப்பினர்களை பதிவு செய்து, உதவிகள் வழங்கும் பணியினை முனைப்புடன் செயல்படுத்தி, 15 தினங்களுக்கு ஒ நல்வாரிய உதவிகள் வழங்கியமை குறித்து, காலமுறை அறிக்கை, அரசுக்கு அனு மேலாண்மை இயக்குநர் தாட்கோ கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

வ. கனகர...
அரசு செய...

பெறுநர்:
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை-101.
ஆணையர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை-5.
ஆணையர், பழங்குடியினர் நலத்துறை, சென்னை-5.
நகல்:
ஆதிதிராவிடர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் நலத்துறைச் செயலரின் நேர்முக உதவியாளர், சென்னை-9
இ.கோ./உதிரி

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

பிரிவு அலு...

Endt-No S1/3567/08/dt. 29.9.08

Copy forwarded to all DMs for necessary action.

GM (P)

1168

தமிழ்நாடு தூய்மைப் பணிபுரிவோர் நல வாரியத்தின் மூலம் நலத்திட்ட உதவிகள் பெறுவதற்கான வழிமுறைகள்.

1. தமிழ்நாடு தூய்மைப் பணிபுரிவோர் நலவாரியத்தில் பதிவுத்தகுதி பெறுபவர்களுக்கான நிதியுதவித் திட்டம் 04.04.2008 முதல் நடைமுறைக்கு வருகிறது.

2. இத்திட்டம் தமிழ்நாடு முழுவதற்கும் பொருந்தும்.

3. பதிவு பெற்ற முதல் உடல் உறுப்பினர் இறப்பின், அவரைச் சார்ந்தவர்கள் என்ற பட்டியலில் மனைவி அல்லது கணவன் (ii) பிள்ளைகள் (iii) விதவை மற்றும் முன்னரே இறந்து விட்ட காலமான மகனின் பிள்ளைகள் (iv) பெற்றோர்கள் ஆகியோர் அடங்குவர்.

4. குடும்பம் என்பதில், ஆண் உறுப்பினராக இருப்பின் அவரது மனைவி, திருமணமான அல்லது திருமணமாகாத அவரது பிள்ளைகள், சார்ந்திருக்கும் பெற்றோர், விதவையான மருமகள், இறந்த மகனின் பிள்ளைகள் ஆகியோர் அடங்குவர்.

5. பெண் உறுப்பினராக இருப்பின், அவரது கணவர், பிள்ளைகள், சார்ந்துள்ள பெற்றோர், விதவை மருமகள், உறுப்பினரின் இறந்த மகனின் பிள்ளைகள் ஆகியோர் குடும்பம் என்ற வரைமுறையில் அடங்குவர்.

6. 18 வயது நிறைவு செய்து 60 வயதுக்குட்பட்ட தூய்மைப் பணிபுரிவோர் இந்நல வாரியத்தில் உறுப்பினராகப் பதிவு பெறத் தகுதியுடையவராவர்.

உறுப்பினர் பதிவுக்கு எவ்வாறு விண்ணப்பிப்பது

7. தமிழ்நாடு தூய்மைப் பணிபுரிவோர் நலவாரியத்தில் உறுப்பினர் பதிவுக்கான விண்ணப்பத்தினை அந்தந்த மாவட்டத்தின் மாநகராட்சி / நகராட்சி / பேரூராட்சி / மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் பெறலாம். விண்ணப்பிப்பவர், இந்நல வாரிய உறுப்பினராக பதிவு பெறத் தகுதியுடைய நபர்கள் தூய்மைப் பணிபுரிவோர் என்பதற்கான சான்றிதழை சுகாதார ஆய்வாளர் / உதவி செயற் பொறியாளர் / செயல் அலுவலர் / மாநகராட்சி ஆணையர் / வட்டாட்சியர் அலுவலரிடம் பெற்று பூர்த்தி செய்த விண்ணப்பத்தினை மாவட்ட மேலாளர், தாட்கா, அவர்களிடம் சமர்ப்பிக்க வேண்டும். இவ்விண்ணப்பங்களை சரிபார்த்து மாவட்ட மேலாளர், தாட்கோ உறுப்பினர்களுக்கு அடையாள அட்டையை வழங்குவார்.

8. (i) இவ்வாறு பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் நலத்திட்ட உதவிகளுக்காக நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் தகுந்த சான்றுகளுடன் மாவட்ட மேலாளர், தாட்கோ அவர்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். இவ்விண்ணப்பங்களை சரிபார்த்து தகுதியான உறுப்பினர்களுக்கு நலத்திட்ட உதவிகளை அன்னார் வழங்குவார். வேறு ஏதாவது நல வாரியங்கள் மூலம் நலத்திட்ட உதவிகள் பெறுபவர்கள் இவ்வாரியம் மூலம் மீண்டும் அதே நல உதவித் திட்டங்களை பெறத் தகுதியற்றவராவார்.

ii) தூய்மைப் பணிபுரிவோர் நல வாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்துள்ளவர்கள் நிதியுதவி பெறுவதற்கு இத்துடன் இணைக்கப்பட்ட படிவம் பூர்த்தி செய்து சம்பந்தப்பட்ட மாவட்ட மேலாளர், தாட்கோ சமர்ப்பிக்க வேண்டும்.

9) இத்திட்டத்தின் கீழ் உறுப்பினர்கள் பதிவுக்காலம் 2 ஆண்டுகளுக்கு செல்லத்தக்கது.

10) பதிவு பெற்ற உறுப்பினர்களுக்கும் ஓர் அடையாள அட்டை இலவசமாக வாரியத்தால் வழங்கப்படும்.

11) அடையாள அட்டையை இழந்துவிட்டால் ரூ.20/- செலுத்தி மாற்று அடையாள அட்டை பெற்றுக் கொள்ளலாம்.

12) (1) பதிவு பெற்ற உறுப்பினர் இறப்பின் அவரது குடும்பத்திற்குச் சேர வேண்டிய நிதியுதவியைப் பெறுவதற்கு நியமனதாரரின் பெயர், முகவரி மற்றும் உறவு ஆகிய விவரங்களை விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட வேண்டும். நிதியுதவியைப் பெறுவதற்கு நியமனதாரரை நியமிக்கும் பொழுது உறுப்பினரின் குடும்பத்தைச் சார்ந்த ஒருவரையோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவரையோ நியமனதாராக நியமிக்க வேண்டும். குடும்ப உறுப்பினர் அல்லாதவரை நியமனதாராக நியமனம் செய்வது செல்லாது.

(2) நியமனதாரரை நியமிக்கும் பொழுது உறுப்பினருக்குக் குடும்பம் இல்லையெனில், நியமிப்பாளராக யாரை வேண்டுமாலும் நியமிக்கலாம்.

(3) நியமனதாரரை நியமித்த பின் உறுப்பினருக்குக் குடும்பம் ஏற்பட்டால், ஏற்கனவே அளித்த நியமனம் உடனடியாகச் செல்லத்தகாததாகிவிடும் குடும்பம் ஏற்பட்டபின் 90 நாட்களுக்குள் குடும்ப உறுப்பினர் ஒருவரையோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவரையோ நியமித்தல் வேண்டும்.

(4) பதிவு பெற்ற உறுப்பினர் இறப்பதற்கு முன் நியமிப்பாளர் இறக்கும் பட்சத்தில் நியமிப்பாளரின் உரிமை உறுப்பினருக்கு மீள வரும். அவர் புதிதாக வேறு குடும்ப உறுப்பினரை நியமனம் செய்ய வேண்டும்.

13) <u>தற்காலிமாக உறுப்பினர் நீக்கம் அல்லது இரத்து செய்தல்</u>

(i) பதிவு பெற்ற <u>உறுப்பினர்</u> தவறான தகவல்கள் கொடுத்தோ, விதிகளுக்கு அல்லது உரிய சட்டத்திற்குப் புறம்பாகவோ நிதியுதவி பெற்றுள்ளார் எனத் தெரியவரின், விசாரணை முடியும் வரை, அவரது உறுப்பினர் நிலையைத் தற்காலிகமாக நீக்க மாவட்ட மேலாளர், தாட்கோ, அதிகாரம் பெற்ற அலுவலர் ஆவார்.

(ii) <u>உறுப்பினர்,</u> தவறான தகவல்கள் கொடுத்தது, விதிகளை அல்லது உரிய சட்டத்தை மீறியுள்ளது விசாரணையில் தெரியவந்தால் அவரது உறுப்பினர் நிலை இரத்து செய்யப்படும். உறுப்பினர் நிலையை இரத்து செய்வதற்கு முன் உறுப்பினருக்குப் போதிய வாய்ப்புகள் அளிக்கப்படும்.

(iii) இரத்து செய்யப்பட்ட உறுப்பினருக்கு மேல்முறையீடு வாய்ப்பு அளிக்கப்படும் உறுப்பினர் இரத்து ஆணை பிறப்பிக்கப்பட்ட 30 நாட்களுக்குள் மேல் முறையீடு செய்யப்படவேண்டும் உரிய முகாந்திரங்களிருப்பின் 30 நாட்களுக்கு மேற்பட்டு ஆனால் 90 நாட்களுக்குள் மேல்முறையீடு செய்ய வாய்ப்பு அளிக்கப்படும். மேல்முறையீடு (உறுப்பினர்– செயலர்) அலுவலரின் உத்தரவே இறுதியானது.

14. <u>உறுப்பினர் பதிவைப் புதுப்பித்தல்</u>

1. 2 ஆண்டுகள் முடிவடையும் தருவாயில் உறுப்பினர் பதிவைப் புதுப்பிக்க வேண்டும்.
2. உரிய காலக் கெடுவுக்குள் புதுப்பிக்கத் தவறினால், உறுப்பினர் தகுதியை இழப்பார். உறுப்பினர் தகுதி இழப்புப் பற்றி தனியே உத்திரவு பிறப்பிக்கப்படமாட்டது. உறுப்பினர் தகுதி இழந்தவர் வாரியத்தால் அதிகாரமளிக்கப்படும் அலுவலர் மூலம் மீண்டும் உறுப்பினராகப் பதிவு பெறலாம். மீண்டும் உறுப்பினராக ப் பதிவு பெற்றாலும் அவர் உறுப்பினர் தகுதி இழந்த காலத்தில் கிடைக்க வேண்டிய நிதியுதவி பெறத் தகுதியற்றவர் ஆவார்.

15. <u>முதியோர் ஒய்வூதியம் திட்டம்</u>

<u>தகுதி</u>

60 வயது பூர்த்தி செய்திருந்தால் முதியோர் ஒய்வூதியம் பெறத் தகுதியுடையவராவர். வாரியத்திடம் 5ஆண்டுகள் தொடர்ந்து பதிவு பெற்றிருப்பின், 60 வயது பூர்த்தியடைவில்லையெனிலும், நோயின் காரணமாக வேலை செய்ய இயலாத நிலையிலிருப்பவர் மற்றும் சாதாரண வேலை செய்ய உடல் தகுதி பெறாத நிலையிலிருப்பவர் ஆகியோருக்கு முதியோர் ஒய்வூதியம் பெறத் தகுதியுண்டு.

1. <u>ஒய்வுதியம் கோருதல்</u>

ஒய்வுதியம் பெறத் தகுதியுடைய ஒவ்வொரு பதிவு பெற்ற உறுப்பினரும் உரிய படிவத்தில் மாவட்ட மேலாளர், தாட்கோ அவர்களிடம் விண்ணப்பிக்க வேண்டும்.

வேலை செய்ய உடல் தகுதியற்று, முதியோர் ஒய்வூதியம் பெறத் தகுதியுடைய உறுப்பினர் சிவில் சர்ஜன் நிலைக்கும் குறையாத மருத்துவ அலுவலரின் சான்றுடன் மாவட்ட மேலாளர், தாட்கோ விண்ணப்பிக்க வேண்டும்.

முதியோர் ஒய்வூதியம் கோரும் ஒவ்வொரு விண்ணப்பத்தையும் ஆய்வு செய்து விதிகளுக்குட்பட்டு, கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ செய்யலாம். மேல்முறையீடு செய்து வாரியத்தின் முடிவே இறுதியாகிறது.

முதியோர் ஒய்வூதியத் தொகை ( மாதந்தோறும்)ரூ. 400/– ஆகும்

16. <u>ஈமச்சடங்கு உதவித் தொகை</u>

பதிவு பெற்ற உறுப்பினர் இறப்பின், மாவட்ட மேலாளர், தாட்கோ இறந்த தொழிலாளரின் நியமனதாரருக்கு ஈமச்சடங்கு செலவுகளுக்காக ரூ 2000/– ஒப்பளிப்பு செய்வார்.

ஈமச்சடங்கு உதவித் தொகை கோரும் உரிய விண்ணப்பத்துடன் உறுப்பினர் இறப்புப் பதிவு சான்றிதழ் மற்றும் வாரியத்தால் வழங்கப்பட்ட அசல் அடையாள அட்டை ஆகியவற்றை சமர்ப்பிக்க வேண்டும்.

17. <u>இயற்கை மரண உதவித் தொகை</u>

பதிவு பெற்ற உறுப்பினர் இயற்கை மரணம் எய்தினால் நியமனதாரருக்கு ரூ.15,000 /– உதவித் தொகை வழங்கப்படும்.

இவ்வுதவித் தொகை கோரும் விண்ணப்பத்துடன் இறப்புப் பதிவு சான்றிதழ் மற்றும் அசல் அடையாள அட்டை ஆகியவற்றைச் சமர்ப்பிக்க வேண்டும்.

18. <u>கல்வி உதவித் தொகை</u>

1) 10 ஆம் வகுப்பு படித்து வரும் உறுப்பினரின் மகளுக்கு ஆண்டுக்கு ரூ. 1000/– கல்வி உதவித் தொகை வழங்கப்படும்.

2) உறுப்பினரின் மகன் / மகள் 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றால் ரூ. 1000/– கல்வி உதவித் தொகை வழங்கப்படும்.

3) 11ஆம் வகுப்பு படித்து வரும் உறுப்பினரின் மகளுக்காக கல்வி உதவித் தொகை ஆண்டுக்கு ரூ. 1000/– வழங்கப்படும்.

4) 12ஆம் வகுப்பு படித்து வரும் உறுப்பினரின் மகளுக்கு கல்வி உதவித் தொகை ஆண்டுக்கு ரூ. 1500/– வழங்கப்படும்.



5)
6)
7)
8)
9)
10)
11)
typingD

5) உறுப்பினரின் மகன் / மகள் +2 தேர்ச்சி பெற்றால் உதவித் தொகை ரூ.1500/– வழங்கப்படும்.

6) முறையான பட்டப்படிப்பு பயிலும் உறுப்பினரின் மகன் / மகள் ஒவ்வொரு கல்வி ஆண்டுக்கும் உதவித் தொகை ரூ. 1500/– வழங்கப்படும்.

7) விடுதியில் தங்கி முறையான பட்டப்படிப்பு பயிலும் மகன் / மகள் ஒவ்வொரு கல்வி ஆண்டுக்கும் உதவித் தொகை ரூ. 1750/– வழங்கப்படும்.

8) உறுப்பினரின் மகன் / மகள் முறையாக முதுகலை பட்டப்படிப்பு படித்தால் ஒவ்வொரு கல்வியாண்டுக்கும் ரூ.2000/– வழங்கப்படும் .விடுதியில் தங்கிப் படித்தால் உதவித் தொகை ரூ.3000/– என உயர்த்தி வழங்கப்படும்.

9) உறுப்பினரின் மகன் / மகள் சட்டம், பொறியியல், கால்நடை மருத்துவ அறிவியல் அல்லது தொழில் முறைசார்பான தொழிற் கல்வி பயிலும் மாணவருக்கு ஒவ்வொரு கல்வி ஆண்டுக்கும் உதவித் தொகை ரூ.2000/– வழங்கப்படும். அம்மாணவர் விடுதியில் தங்கிப் பயின்றால் அவ்வுதவித் தொகை ரூ.4000/– என உயர்த்தி வழங்கப்படும்.

10) விண்ணப்பதாரரின் மகன் / மகள் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பு படித்தால் ஒவ்வொரு கல்வி ஆண்டுக்கும் கல்வி உதவித் தொகை ரூ. 4000/– வழங்கப்படும். அவர் விடுதியில் தங்கிப் படித்தால் அத்தொகை ரூ.6000/–ஆக உயர்த்தி வழங்கப்படும்.

11) விண்ணப்பதாரரின் மகன் / மகள் தொழிற் பயிற்சி நிலையம் அல்லது பாலிடெக்னிக்கில் பயின்றால் ஒவ்வொரு கல்வி ஆண்டுக்கும் கல்வி உதவித் தொகையாக ரூ. 1000/– வழங்கப்படும். அவர் விடுதியில் தங்கிப் பயின்றால் ரூ.1200/– என உயர்த்தி வழங்கப்படும்.

12) கல்வி உதவித் தொகை கீழ்க் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்பவர்களுக்கு மட்டும் வழங்கப்படும்.

i) பதிவு செய்யப்பட்ட உறுப்பினரின் இரண்டு குழந்தைகளுக்கு மட்டும் கல்வி உதவித்தொகை வழங்கப்படும்.

ii) கணவன் மற்றும் மனைவி கல்வி உதவித் தொகை கோரி விண்ணப்பித்திருந்தால் இருவரில் ஒருவருக்கு மட்டும் கல்வி உதவித் தொகை வழங்கப்படும்.

iii) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின உறுப்பினரின் மகன்/மகள் நலத்துறையில் வழங்கப்படும் கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழும் உதவித் தொகை பெறத் தகுதியுடையவராக இருப்பின், ஏதாவது ஒரு திட்டத்தின் கீழ் மட்டுமே உதவித்தொகை பெறத் தகுதியுடையவர் ஆவார்.

19. <u>திருமண உதவித் தொகை</u>

பதிவு பெற்ற உறுப்பினர் அல்லது அவரது மகன் / மகள் திருமணச் செலவிற்கு விண்ணப்பம் செய்தால் உதவித் தொகையாக ரூ.2000/– வழங்கப்படும்.

இவ்வுதவித் தொகை பெற கீழ்க் காணும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்:-

இவ்வுதவித் தொகை பதிவுப் பெற்ற உறுப்பினரின் குடும்பத்திற்கு இரு முறை மட்டுமே வழங்கப்படும்.

திருமண சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட வயதை பூர்த்தி செய்தவராக இருக்க வேண்டும்.

உரிய ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

மகன் அல்லது மகள் திருமண உதவித் தொகை கோரி கணவர் மற்றும் மனைவி ஆகிய இருவரும் விண்ணப்பித்திருந்தால் இருவரில் ஒருவருக்கு மட்டும் உதவித் தொகை வழங்கப்படும்.

20. <u>மகப்பேறு/கருக்கலைப்பு/கருச்சிதைவு/உதவித்தொகை</u>

பதிவு பெற்ற பெண் உறுப்பினருக்கு கீழ் வரும் உதவித் தொகை வழங்கப்படும்.

i) மகப்பேறு – ரூ. 6000/– (மாதம் ரூ. 1000/– வீதம் 6 மாதங்களுக்கு) கருவுற்ற ஏழாவது மாதத்திலிருந்து வழங்கப்படும்)

ii) கருச்சிதைவு – ரூ. 3000/–

iii) கருக்கலைப்பு – ரூ. 3000/–

கீழ் வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்பவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படும்:-

மருத்துவர் சான்று பெறப்பட வேண்டும்.

பதிவு பெற்ற பெண் உறுப்பினர் 2 முறை மட்டும் இவ்வுதவித் தொகை பெறலாம்.

பதிவு பெற்ற பெண் உறுப்பினருக்கு ஏற்கனவே 2 பிள்ளைகள் இருப்பின் இவ்வுதவித் தொகை பெற தகுதியற்றவராவர்.

21. <u>கண் கண்ணாடி வாங்குவதற்கு உதவித் தொகை</u>

பதிவு பெற்ற உறுப்பினர் கண் கண்ணாடி வாங்குவதற்கான செலவை ஈடுகட்டுவதற்கு ரூ.500/– க்கு மேற்படாமல் உதவித் தொகை வழங்கப்படும்.

இவ்வுதவித் தொகை கீழ்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்கப்படும்

பதிவு பெற்ற உறுப்பினருக்கு ஒரே ஒரு முறை தான் இவ்வுதவித் தொகை வழங்கப்படும்.

22. <u>விபத்தால் மரணம் அல்லது விபத்தினால் உடல் ஊனம் ஆகியவற்றுக்கு நிவாரணம் அளித்தல்</u>

பதிவு பெற்ற உறுப்பினருக்கு விபத்து ஏற்படின் விபத்து நிவாரணம் பெறத் தகுதியுடையவராவர்.

விளக்கம்

விபத்து என்ற வரம்பின் கீழ் மரணம், உடல் உறுப்பு இழப்பு அல்லது உடல் உறுப்பு துண்டிக்கப்படுதல் அல்லது உடல் காயம், கண்பார்வை இழப்பு ஆகியவை அடங்கும்.

சுயமாக வேண்டுமென்றே ஏற்படுத்திக் கொண்ட உடல் காயம், தற்கொலை தற்கொலை முயற்சி, குடிபோதையால் அல்லது மருந்து மூலம் ஏற்படுத்திய காயம் அல்லது சட்டத்திற்கும் விதிமுறைகளுக்கும் புறம்பாக செயல்பட்டதால் ஏற்பட்ட மரணம் அல்லது உடல் உறுப்பு இழப்பு ஆகியவை விபத்து என்ற வரன்முறையில் வராது.

உரிய சான்றுகள் சமர்ப்பிக்க வேண்டும்.

விபத்தால் ஏற்பட்ட இறப்பு அல்லது பல்வகையான உடல் உறுப்பு இழப்பு ஆகியவற்றுக்கு கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்ட தொகை வழங்கப்படும்.

| | |
|---|---|
| அ) இறப்பு | ரூ. 1,00,000 |
| ஆ) பின்வரும் உறுப்புகளை இழத்தல் மற்றும் முழுவதும் அல்லது சரிசெய்ய இயலாத அளவுக்கு உறுப்புகளை இழத்தல்<br>i) இரு கைகள் அல்லது<br>ii) இருகால்கள் அல்லது<br>iii) ஒரு கை மற்றும் ஒரு கால் அல்லது<br>iv) இரு விழிகளிலும் முழுவதும் சரி செய்ய இயலாத அளவிற்கு பார்வை இழப்பு | ரூ. 1,00,000 |
| இ) பின்வரும் உறுப்புகளை இழத்தல் அல்லது முழுவதும் மற்றும் சரி செய்ய இயலாத அளவுக்கு உறுப்புகளை இழத்தல்<br>1. ஒரு கை அல்லது<br>2. ஒரு கால் அல்லது<br>3. ஒரு கண் முழுவதும் சரி செய்ய இயலாத அளவுக்கு பார்வை இழத்தல் | ரூ. 50,000 |
| ஈ) மேலே இனங்கள் (ஆ) மற்றும் (இ) ல் குறிப்பிடப்பட்ட காயங்கள் தவிர, ஏனைய காயங்களினால் நிரந்தரமாக முழு இயலாமை ஏற்படுவதற்கு | ரூ. 25,000 |
| உ) இதனுடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையின் நெடும்பத்தி (1) இல் குறிப்பிட்டவாறு ஓரளவு நிரந்தர இயலாமை ஏற்பட்டதற்கு | பின்வரும் அட்டவணையின் நெடும் பத்தி (2) லுள்ள நிகரான பதில் குறிப்பிட்டுள்ள வீதத்தில் |

## அட்டவணை

| ஏலாமையின் தன்மை (1) | இழப்பீடு (சதவீதத்தில்) கணக்கிடப்பட வேண்டியது (2) | ரூ. 1,00,000–ல் சதவீதம் (3) |
|---|---|---|
| 1. கால் விரல்கள் இழப்பு | அனைத்தும் | 20 |
| | கால் பெருவிரலில் இரு தனி எலும்புகள் | 5 |
| | கால் பெருவிரலில் ஒரு தனி எலும்புகள் | 2 |
| | கால் பெருவிரலில் தவிர ஒன்றுக்கு மேற்பட்ட கால் விரல்கள் ஒவ்வொன்றிலும் ஒரு தனி எலும்பு | 1 |
| 2. கேட்கும் திறன் இழப்பு | இரு காதுகள் | 50 |
| 3. கேட்கும் திறன் இழப்பு | ஒரு காது | 15 |
| 4. ஒரு கையில் 4 விரல்கள் மற்றும் பெருவிரல் இழப்பு | | 40 |
| 5. நான்கு விரல்கள் இழப்பு | | 35 |
| 6. பெருவிரல் இழப்பு | பெருவிரல் இரு தனி எலும்புகள் | 25 |
| 7. சுட்டுவிரல் இழப்பு | மூன்று தனி எலும்புகள் | 10 |
| | இரு தனி எலும்புகள் | 8 |
| | ஒரு தனி எலும்புகள் | 4 |
| 8. நடுவிரல் இழப்பு | மூன்று தனி எலும்புகள் | 6 |
| | இரு தனி எலும்புகள் | 4 |
| | ஒரு தனி எலும்புகள் | 2 |
| 9. மோதிரவிரல் இழப்பு | மூன்று தனி எலும்புகள் | 5 |
| | இரு தனி எலும்புகள் | 4 |
| | ஒரு தனி எலும்புகள் | 2 |
| 10. சுண்டுவிரல் இழப்பு | மூன்று தனி எலும்புகள் | 4 |
| | இரு தனி எலும்புகள் | 3 |
| | ஒரு தனி எலும்புகள் | 2 |
| 11. மணிக்கட்டிற்கும் விரல்களுக்கும் இடைப்பட்ட உள்ளங் கைப்பகுதி இழப்பு முதலாவது அல்லது இரண்டாவது, மூன்றாவது, நான்காவது அல்லது ஐந்தாவது | கூடுதல் | 2 |
| 12. வேறு ஏதேனும் நிலையான ஓரளவு ஏலாமை | | மருத்துவர் மதிப்பிட்ட படியான சதவீதம் |

<u>நிவாரணத் தொகை கேட்பு</u>

விபத்தால் இறப்பு அல்லது உடல் உறுப்பு இழப்பு, கண்பார்வை இழப்பு போன்றவற்றை வாரியத்திடமும் அல்லது உரிய காவல் நிலையத்திலும் தெரிவிக்க வேண்டும். இது குறித்து காயமுற்ற உறுப்பினரோ, இறந்துபோன நியமிப்பாளரோ அல்லது சம்பந்தப்பட்டவர் வாரியத்திற்கு தெரியப்படுத்தலாம். விபத்து குறித்து அறிவிப்பு பெற்றவுடன் அவ்விபத்து குறித்து விசாரணை செய்யப்படும்.

உடல் காயம், உடல் உறுப்புகள் இழப்பு அல்லது கண் பார்வை இழப்பு குறித்து நிவாரணம் கோரி பதிவு பெற்ற உறுப்பினர் விண்ணப்பம் செய்ய வேண்டும். இறப்பு நிகழ்வுக்கு நிவாரணத் தொகை கோரி நியமனர்கள் விண்ணப்பம் செய்ய வேண்டும்.

பதிவு பெற்ற உறுப்பினர் இறப்பு நிகழ்வு நிவாரணம் கோரும் விண்ணப்பத்துடன் உரிய அலுவலர்களிடமிருந்து பெற்ற இறப்புப் பதிவு சான்றிதழ், இறந்தவரின் உடல் பரிசோதனை சான்றிதழ் ஆகியவற்றை இணைக்க வேண்டும்.

இறந்தவரின் உடல் பரிசோதனை சான்றிதழ் பெற 30 நாட்களுக்கு மேல் தாமதமானால் வட்டாட்சியரிடமிருந்து சான்றிதழ் பெற்று அனுப்பலாம்.

உடல் உறுப்புகள் இழப்பு அல்லது கண்பார்வை இழப்பு அல்லது பகுதி உடல் ஊனம் ஆகியவற்றுக்கு உதவி குடிமை அறுவை சிகிச்சை நிபுணரிடமிருந்து மருத்துவச் சான்றிதழ் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

உதவித் தொகை கோரும் கோரிக்கையை உரியவாறு சரிபார்த்தபின் வாரியம் அல்லது வாரியத்தால் அதிகாரமளிக்கப்பட்ட மாவட்ட மேலாளர், தாட்கோ, உரிய உதவித் தொகையை ஒப்பளிப்பு செய்வார்.

தூய்மைப் பணிபுரிவோர் நல வாரிய உறுப்பினர் சேர்க்கைக்குரிய விண்ணப்பப் படிவம், உறுப்பினர் அடையாள அட்டை மற்றும் பல்வேறு நலத்திட்ட உதவிகளைப் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

1) தூய்மைப் பணிபுரிவோர் நலவாரிய உறுப்பினராக பதிவு செய்வதற்கான விண்ணப்ப படிவம்,

2) தூய்மைப் பணிபுரிவோர் நலவாரிய உறுப்பினர் அடையாள அட்டை

3) தூய்மைப் பணிபுரிவோர் நலவாரிய உறுப்பினர் விபத்தினால் இறப்பு அல்லது ஊனம் ஏற்பட்டால் ஊனத்தின் தன்மைக்கேற்ப உதவித் தொகை கோரும் விண்ணப்பப்படிவம்.

4) தூய்மைப் பணிபுரிவோர் நலவாரிய உறுப்பினர் இயற்கை மரணம்/ஈமச்சடங்கு உதவித் தொகை பெற விண்ணப்பப்படிவம்.

5) தூய்மைப் பணிபுரிவோர் நலவாரிய உறுப்பினரின் மகன்/ 10 ஆம் வகுப்பு/12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றதற்கான கல்வி உதவித் தொகை பெற விண்ணப்பப்படிவம்.

6) தூய்மைப் பணிபுரிவோர் நலவாரிய உறுப்பினரின் மகள் 10 ஆம் வகுப்பு /11 ஆம் வகுப்பு12 ஆம் வகுப்பு பயில்வதற்கான கல்வி உதவித் தொகை பெற விண்ணப்பப்படிவம்.

7) தூய்மைப் பணிபுரிவோர் நலவாரிய உறுப்பினரின் மகன்/மகள் முறையான பட்டபடிப்பு/பட்டமேற்படிப்பு/தொழிற்கல்வி/தொழிற்கல்வி பட்டமேற்படிப்பு /ஐ.டி.ஐ அல்லது பாலிடெக்னிக் படிப்பிற்கு கல்வி உதவித் தொகை விண்ணப்பப் படிவம்.

8) தூய்மைப் பணிபுரிவோர் நலவாரிய உறுப்பினர்/உறுப்பினரின் குடும்ப உறுப்பினர் திருமண உதவித்தொகை விண்ணப்பபடிவம்.

9) தூய்மைப் பணிபுரிவோர் நலவாரிய உறுப்பினரின் மனைவி/குடும்பப் பெண் உறுப்பினரின் பிரசவ காலம் அல்லது குறைப்பிரசவம் /கருக்கலைப்புக்கான நிதியுதவி பெற விண்ணப்படிவம்.

10) தூய்மைப் பணிபுரிவோர் நல வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர்களுக்கு கண் கண்ணாடி வாங்குவதற்கு உதவித் தொகை கோரும் விண்ணப்படிவம்

11) தூய்மைப் பணிபுரிவோர் நல வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினரின் முதியோர் ஓய்வூதியம் கோரும் விண்ணப்படிவம்.

12) தூய்மைப் பணிபுரிவோர் நல வாரியத்தில் பதிவு பெற்ற தூய்மைப் பணிபுரிவோர் உறுப்பினரின் கை, கால் முடக்க ஓய்வூதியம் கோரும் விண்ணப்படிவம்.